4

LIBRARY
Eastern University, Sri Lanka.
07 APR 2009

# கிழக்குப் பல்கலைக் கழகம் இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு – 2006/2007 (வெளிவாரி)

## (ஏப்ரல் /மே 2009)

## EDU 302 பாடசாலை முகாமைத்துவம்

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக. நேரம்: 03 மணித்தியாலங்கள்

---

1. (அ) பாடசாலையில் சிறந்த முகாமைத்துவத்தை ஏற்படுத்துவதில் பாடசாலை மேற்பார்வையின் முக்கியத்துவத்தை விளக்குக.

   (ஆ) சிறந்த மேற்பார்வையாளர் ஒருவர் எத்தகைய பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்?

   (இ) இன்று பாடசாலைகளில் காணப்படும் பிரச்சினைகளை மேற்பார்வை மூலம் எந்தளவுக்கு தீர்க்கலாம்?

2. பாடசாலை மட்ட முகாமைத்துவம் (School Based Management) என்றால் என்ன என்பதை விளக்கி அதனை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படக் கூடிய பிரச்சினைகளை ஆராய்க.

3. (அ) பாடசாலைகளில் மாற்றங்களை முகாமை செய்தல் என்பதால் நீர் விளங்குவது யாது? விளக்குக.

   (ஆ) புதிய மாற்றம் ஒன்றை செயற்படுத்தும் போது அதிபர் எதிர் கொள்ளும் சவால்கள் யாவை? அவற்றை வெற்றிகரமாக எவ்வாறு தீர்க்கலாம்?

4. (அ) "பாடசாலை அபிவிருத்திக்குச் சமூகத்தின் பங்களிப்பு" என்பது பற்றிச் சுருக்கமாக விளக்குக.

   (ஆ) அதிபர் ஒருவர் பாடசாலை அபிவிருத்திக்குச் சமூகப் பங்களிப்பைப் பெறுவதில் உள்ள தடைகளை ஆராய்க.

5. (அ) வகுப்பறை முகாமைத்துவம் என்றால் என்ன?

   (ஆ) "ஒரு பாடசாலை பயன்தரும் பாடசாலையாக இருப்பதற்கு வகுப்பறைகளின் சிறப்பான முகாமைத்துவம் மிக அவசியம்" விமர்சன ரீதியாக ஆராய்க.

6. (அ) பாடசாலை மட்டத் திட்டமிடல் மூலம் ஏற்படக்கூடிய பயன்கள் யாவை?

   (ஆ) உமது அனுபவத்தில் பாடசாலைகளில் சிறந்த திட்டமிடல் இல்லாமையால் காணப்படும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கான திட்டமிடல் வழிவகைகளை ஆராய்க.

7. பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விளக்கக்குறிப்புக்கள் எழுதுக.

   (அ) தலைமைத்துவப் பண்புகள்

   (ஆ) தீர்மானம் செய்யும் நுட்பங்கள்

   (இ) வலுக்கள ஆய்வு

   (ஈ) குழு அமைத்தலும் முகாமைத்துவமும்

8. (அ) பாடசாலைகளில் கலைத்திட்ட முகாமைத்துவம் என்றால் என்ன என விளக்குக.

   (ஆ) கலைத்திட்டத்தை முகாமை செய்வதில் இன்று பாடசாலைகளில் காணப்படும் பிரச்சினைகளை இனங்கண்டு அதனை மேம்படுத்த உமது கருத்துக்களை முன்வைக்குக.